அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 01 /2018
தேதி : 05.01.2018

**போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று போராட்டத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்.**

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசு போக்குவரத்து ஊழியர்கள், திடீரென போராட்டத்தில் இறங்கி அதனால் தமிழகம் முழுவதும் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களில் பொங்கல் உள்ளிட்ட பல்வேறு பண்டிகைகளின் காரணமாக தொடர் விடுமுறை வருவதை முன்னிட்டு லட்சக்கணக்கான பயணிகள் தங்கள் ஊர்களுக்கு பயணிக்க வேண்டிய சூழ்நிலையில் இப்போராட்டம் நிகழ்ந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

போக்குவரத்து துறை ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பல தினங்களுக்கு முன்பு போராட்டம் நடத்தியதை தொடர்ந்து பேச்சுவார்த்தைகளின் மூலம் கால தாமதப்படுத்தாமல் அவர்களின் பிரச்சனைகளை தமிழக அரசு முடிவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். மேலும், போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்து முதல்கட்டமாக 175 கோடி வழங்கப்பட்டது.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



போக்குவரத்து துறை நஷ்டத்தில் இயங்குகிறது என்றும் கடன் சுமை அதிகமாக இருக்கிறது. ஆகவே, போக்குவரத்துத் துறைக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்ந்து வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டு கடன் பெறப்பட்டு வருகிறது என்றும் தெரிய வருகிறது.

சில வழித்தடங்கள் தவிர்த்து பெரும்பாலும் அனைத்து வழித்தடங்களிலும் அரசு போக்குவரத்தை பெருமளவில் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, வருவாய் குறைந்த அளவில் தான் கிடைக்கிறது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், நிர்வாக குறைபாடுகள், பேருந்துகளின் முறையான பராமரிப்பின்மை, டீசல் விலை உயர்வு போன்ற காரணங்கள் வருவாய்க்கு மிஞ்சிய செலவினங்களை ஏற்படுத்தி நஷ்டம் ஏற்படுத்திவிடுகிறது.

தனியார் பேருந்துகளில் அரசு பேருந்துகளை விட பல மடங்கு கட்டண உயர்வு இருந்தாலும், அவற்றை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கையும், அதையொட்டி தனியார் பேருந்துகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருகிறது. காரணம் தனியார் பேருந்து நிறுவனங்கள் அளித்து வரும் வசதியான சேவை, நேர பராமரிப்பு போன்ற காரணங்கள். ஆனால், அரசு பேருந்துகள் பராமரிப்பிலிருந்து பிற வசதிகள் வரை பின் தங்கிய நிலையிலேயே இருந்து வருகிறது. இக்குறைபாட்டை தீர்த்து வைத்து தமிழக அரசு பேருந்துகளின் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேவைகளின் தரத்தை உயர்த்தி, கட்டணங்கள் உயர்த்தப்படும் போது மக்கள் அக்கட்டண உயர்வை ஏற்றுக் கொள்வார்கள். எனவே, அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் உயரவும், நஷ்டம் இல்லாமல் இயங்கவும், அரசு போக்குவரத்தை தனியார் துறையின் பங்களிப்போடு பேருந்து சேவையை உயர்த்துவது குறித்து தக்க நிபுணர் குழு அமைத்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும்

..3

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



இதன் மூலம் நான் பேருந்து சேவையை தனியார் மயமாக்க வேண்டும் என்று வலியுறுத்துவதாக கருதக்கூடாது. தனியார் பங்களிப்புடன் பேருந்து சேவையை மேம்படுத்த வேண்டும் என்பதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

பண்டிகை காலத்தையொட்டி பயணிகள் அவதிக்குள்ளாகாதவாறு போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்தை, அவர்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று தமிழக அரசை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com